பாடம் 1

# புது சீடன்

**உங்கள் நண்பர்கள் யாராவது உங்களுக்கு விரோதமாக ஏதாவது செய்திருக்கிறார்களா? ஒருமுறை இயேசுவின் சீடன் அவரைக் காட்டிக்கொடுத்தான். அவன் பெயர் யூதாஸ். அவன் பின்னர் தற்கொலை செய்துகொண்டான். இயேசுவின் மற்ற சீடர்கள் அவனுக்குப் பதிலாக வேறொருவரை தெரிந்துகொண்டார்கள். அது எப்படி என்பதைப் பார்ப்போம்.**

இயேசுவை ஒரு தோட்டத்தில் வைத்துக் கைதுசெய்தார்கள். சீடர்கள் எல்லோரும் அவரை விட்டு ஓடிப்போய் விட்டார்கள். அன்றைய தினம் விசாரணை செய்து அவரைக் கொலையும் செய்துவிட்டார்கள். சீடர்களால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

அடுத்த நாளில் இயேசுவைப் பார்க்க வந்த அநேகர் அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு மிகவும் வருந்தினார்கள்.

‘‘ஞாயிற்றுக்கிழமைக் காலையில் இயேசு உயிரோடு எழுந்து விட்டார்’’ என்று சில பெண்கள் வந்து சொன்னார்கள். இயேசு உயிரோடிருக்கிறார் என்பதை அவர்களால் நம்பவே முடியவில்லை; இயேசு சீடர்களுக்கு மத்தியில் வந்து தாம் உயிரோடிருப்பதை உணர்த்தினார்.



அதற்குப் பிறகு 6 வாரங்கள் இயேசு அவர்களுக்கு அநேக காரியங்களைக் கற்றுக் கொடுத்தார். 40 நாட்களுக்குப் பிறகு இயேசுவோடு அவர்கள் ஒலிவ மலைக்குச் சென்றார்கள்; அங்கே அவர்களிடம் இயேசு, ‘‘நீங்கள்

## மனன வசனம்

**எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.**

**அப்போஸ்தலர் 1:8.**

எருசலேமிலே காத்திருங்கள், நான் பரிசுத்த ஆவியை உங்களுக்கு அனுப்புவேன்; அவர் வழிகாட்டியாக இருந்து உங்களைத் தேற்றுவார். அவரைப் பெற்றதும் நீங்கள் மற்ற இடங்களுக்குச் செல்லலாம்'' என்று கூறினார்.

அவ்வாறு சொன்ன பிறகு அவர் அப்படியே வானத்தில் மேல்நோக்கிச் சென்றார். பின்னர் அவரை அவர்கள் காணவில்லை.

அதற்குப் பிறகு ஒரு பெரிய அறையிலே ஒவ்வொரு நாளும் சீடர்களும், இன்னும் பல விசுவாசிகளும் ஒன்றுகூடி ஜெபித்தார்கள். இயேசு அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த கருத்துக்களையெல்லாம் விவரித்தார்கள்.

ஒருநாள் அங்கு 120 விசுவாசிகள் கூடியிருந்தார்கள்; பேதுரு பேச எழுந்து நின்றார்.

''நம்மோடு இருந்த யூதாஸ் இறந்துபோனான்; அவனுக்குப் பதிலாக வேறொருவரை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்றார்.

இயேசு ஞானஸ்நானம் பெற்றது முதல் அவர் உயிர்த்தெழுந்த வரை அவரோடிருந்த ஒருவரை சீடனாகத் தேர்வுசெய்ய முடிவு செய்தார்கள். சிலர், யோசேப்பு என்பவரைத் தெரிந்துகொள்ளலாம் என்று சொன்னார்கள். வேறு சிலர் மத்தியா என்பவரைத் தெரிந்துகொள்ளலாம் என்று சொன்னார்கள், யாரைத் தெரிந்துகொள்வது? எல்லோரும் ஜெபித்தார்கள்.



## செய்தி

**இயேசுவின் நண்பர்களுக்கு இயேசுவை நன்றாகத் தெரியும்.**

'எல்லோருடைய இருதயங்களும் உமக்குத் தெரியும்; இந்த இரண்டுபேரில் யூதாசின் இடத்தை எடுத்துக்கொள்ளப் போவது யார்? நீரே! அதைக் காட்டவேண்டும்' என்று கேட்டார்கள்.

அந்நாட்களில்சீட்டுப்போடுவது வழக்கமாக இருந்தது. இரண்டு குச்சிகளை எடுத்துக் கொள்வார்கள். ஒரு குச்சி அடுத்ததைவிட நீளமானதாக இருக்கும். அதைவைத்து அவர்கள் தீர்மானித்துக்கொள்வார்கள்.

எப்படி அவர்கள் சீட்டுப் போட்டார்கள் என்பது தெரியவில்லை. ஆனால், சீட்டுப் போட்டு மத்தியாவைத் தெரிந்து கொண்டார்கள். மற்ற சீடர்களோடு சேர்ந்து இயேசுவைப் பற்றியும், அவர் அன்பைப் பற்றியும் உலகத்திற்குச் சொல்கிற அந்த 12 அப்போஸ்தலர்களில் ஒருவராக மத்தியாவும் தெரிந்துகொள்ளப்பட்டார்.

செல்லமே! நீயும்கூட இயேசுவின் அன்பை உலகத்திற்குச் சொல்லலாம், சொல்வாயா?

**செய்முறை:**

யூதாசுக்குப் பதிலாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க இரண்டு பேருடைய பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. கடிகாரத்தில் உள்ள எண்களையும் எழுத்துகளையும் பயன்படுத்தி இருவரின் பெயர்களைக் கண்டு பிடி. பிறகு, தேர்ந்து எடுக்கப் பட்டவரின் பெயரை வட்டமிடு.

**புதிர் 1**




